<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No.666 /2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கணேசன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 08.10.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் உடுமலையில தாண்டகவுண்டன்தோட்டத்தில் வசித்து வருகிறேன். நான் டீ மாஸ்டராக வருகிறேன். இப்பொழுது எந்த ஊரில் டீ மாஸ்டராக வேலை செய்து வருகிறீர்கள் என்றால் தாண்டா கவுண்டன் தோட்டத்தில் அருகில் வேலை செய்து வருகிறேன். வழக்கு சமயத்தில் தளி ரோட்டில் உள்ள நியூ அச்சயா பேக்கரியில் டீ மாஸ்டராக பணி புரிந்து வந்தேன், 27.07.2018 ம் தேதியன்று மதியம் நேரத்தில் உணவு பாதுகாப்பு அலுவலர் அச்சயா பேக்கரிக்கு வந்து சோதனை செய்து டீ போடும் இடத்தில் உள்ள டீ தூள்களை உணவு மாதிரிக்காக எடுத்தார். அந்த உணவு மாதிரியை எடுத்து ஆய்வுக்கு அனுப்புவதாக உணவு பாதுகாப்பு அலுவலர் கூறினார். உணவு பாதுகாப்பு அதிகாரி மாதிரி டீ தூள்கள் சுமார 4 கிலோ எடுத்தார் அதற்கு 230 ரூபாய் கொடுத்தார். மாதிரி எடுககும் பொழுது உரிமையாளரும் ரஇருந்தார் பெயர் ராமநாதன் ஆஜர் எதிரிதான் அவர். 4 கிலோ டீ தூளை 4 பொட்டலங்களாக தயார் செய்தார். அதில் நானும் ஆஜர் எதிரியும் கையொபப்பம் செய்தோம். நான் மூன்று கையொப்பங்களை செய்தேன். உணவு மாதிரியை எடுததற்காகவும் ஆய்வுக்கு அனுப்புவதற்காகவும் பணம் செலுத்தியதற்காகவும் நான் சாட்சி

கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் அசாஆ 4 ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்ம் அசாஆ 12 என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் உணவு மாதிரிக்காக டீ தூள் எடுத்ததற்காக தயாரிக்கப்பட்ட அ.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்ப்ம அ.சா.ஆ.13 என குறியீடு செய்யப்பட்டுள்ளது.** என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள ரொக்க ரசீதுல் உள்ள சாட்சி கையெப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ 14 என குறியீடு செய்யப்படுகிறது.** டீ தூள் எடுத்தது எந்த மாதிரி இருந்தது என்றால் பக்கெட்டில் இருந்து எடுக்கப்பட்டது. அதற்குப்பிறகு கையொப்பம் பெற்றுக் கொண்டு உணவு பாதுகாப்பு அலுவலர் சென்றுவிட்டார். இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். இதன் பிறகு உரிமையாளர் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது எனக்கு தெரியாது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எத்தனை வருடமாக டீ ஸ்டாலின் வேலை செய்தீர்கள் என்றால் ஒரு வருடம். பொதுவாக டீக்கடையில் 3 roses, AVT and Chakra Gold போன்ற 3 விதமான டீத்தூள்களை கலந்து டப்பாவில் போட்டு உபயோகப்படுத்துவது வழக்கம் என்றால் ஆமாம். அப்படி செய்யும்போது அந்த பக்கெட்டில் இருந்து தான் சாம்பிள் எடுத்தார்கள் என்றால் ஆமாம். அதில் தான் நீங்கள் கையொப்பம் செய்தீர்கள் என்றால் ஆமாம். உடுமலை – மூணாறு மெயின் ரோடு என்பதால் கம்பெனி டீத்தூள்கள் மட்டும்தான் உபயோகிப்பார்கள் என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை** இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.